# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூஉ] யாழ்ப்பாணம்:- கரவருட கார்த்திகை மீ உக உ வெள்ளிக்கிழமை (7 டிசம்பர் 1951) [இல - கூகூ]

அரசியல் அலை

## கதம்பக் கட்சிகளும் காளான் முளைகளும்

## சமயத்திற்குத்தக்கசம்பிரதாயம்

### வீழ்த்துவதும் தாழ்த்துவதும் அல்லால் வேறு முறையில்லை

"ஆர்குடிகெடினும் நீ குடிமிளகுசாற்றை" என்றவாறு இலங்கை அரசியலில் ஈடுபட்டிருக்கும் எல்லோரும் தங்கள் தங்கள் நயத்திலும் புகழிலும் கண்ணுங் கருத்துமாய் இருக்கின்றனரே யல்லாமல் நாட்டின் நலத்திற்காகப் பாடுபடுகின்றிலர் என்பது முன்னரிலும் பன்மடங்கு கூடுதலாகத் தெரிய வருகின்றது.

சில காலத்திற்கு முன் சிங்கள மகாசபைத் தலைவர் ஐக்கியதேசியக் கட்சியை விட்டு விலகினமை நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். வெற்றி வீர சிங்கம் என்று மார்புதட்டி வெளிக்கிளம்பினர். நாட்டிற் பரபரப்பு. இன்றைய அரசாங்கம் இன்றோடு நின்றுவிடும் என்று பலப்பல பாராளுமன்றத்தங்கத்தவர் ஓடி ஆடித் திரிந்தனர். இடதுசாரிகள் இருக்கிறார்களே எதிர்க் கட்சியில் ஏதும்பிரிவினையைமணந்து பிடித்தார்களோ உடனே அந்த இடத்திற்குப் போய் சம்புமித்திர யுத்திகாட்டித் துரும்பைத் தூணுக்கி விடுகிறார்கள்.

ஐக்கியதேசியக்கட்சி நெய்க்குடம் உடைந்ததுதான் தாமதம் வேட்டைக்கு ஆயத்தமாயிருந்த இடதுசாரிகள் மாத்திரமன்று மற்றைய எதிர்க் கட்சியினர் பலரும் திரண்டனர்; வீழ்த்துப்வீரச் செயலில் ஈடுபட்டனர். வரவு செலவுத் திட்ட விவாதத்திலும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலுந் 'வீழ்த்தும் பணி' விழலுக்கிறைத்ததாய் முடிந்தது.

மனித சக்தி

'இடதுசாரிகள்' என்றால் பொதுவுடைமை, சமசமாஜம் என்பனவற்றின் தொகுப்பு. இவ்வகுப்பினர் இறைவனால் இயலுவது ஒன்றுமில்லை, மனிதனே ஆக்கவும் அழிக்கவும் வல்லவன் என்ற கொள்கையினர். சமயப் பற்றற்ற கிரீச்சுரவாதிகள்.

'வலதுசாரிகள்' என்றால் இருந்தபடி இருப்பவர். மாற்றம் விரும்பாதவர் எனபர். ஆனால் எல்லாம் இறைவனால் இயங்குவன என்றகொள்கையை மறுப்பவர்களல்லர்.

வலதுசாரியான திரு. பண்டார நாயக்காவை இடதுசாரிகள் தேடிப்போவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால், திரு. பண்டாரநாயக்கா இடதுசாரிகளின் காதற் கதைகளில் நம்பிக்கை வைத்து அவர்களில் மோகங் கொண்டமைதான் வேடிக்கை.

புதுக்காதலர் அளவளாவி முடிந்தது முடியவில்லை ஒரு ஊடல் தோன்றி விட்டது. திரு. W. தகநாயக்கவென்றால் எவருமறிவர். உள்ளதை உள்ளபடி உரைப்பவர். அத்தகையார் இடதுசாரிக் கட்சியின் இரும்புத் தூண். என்ன சொன்னார் பாருங்கள்! "திரு பண்டாரநாயக்கா தருணம் பார்த்து தன்னயம் பார்ப்பவர். திரு சேனநாயக்காவுக்கும் திரு பண்டாரநாயக்காவுக்கும் இடையே உள்ள பிணக்கு இவர்களின் சொந்த அலுவலே அன்றி கொள்கை வித்தியாசத்தினாலன்று. ஆதலின் திரு பண்டாரநாயக்காவைப் பற்றி எச்சரிக்கையா யிருங்கள்". ஆகா! அருமருந்தன்ன நற்சாட்சிப் பத்திரம்.

தொடர்ச்சி 3 - ம் பக்கம்

உ

## "வாழ்த்துவார் வாயினுள்ளார்........."

திருச்சிற்றம்பலம்
பந்தித்த சடையின் மேலே பாய்புனல் அதனை வைத்து
அந்திப்போ தனலும் ஆடி அடிகள்ஐ யாறு புக்கார்
வந்திப்பார் வணங்கி நின்று வாழ்த்துவார் வாயினுள்ளார்
சிந்திப்பார் சிந்தை யுள்ளார் திருந்துநேயத் தாரே.
திருச்சிற்றம்பலம்

— அப்பர் அடிகள்.

## ஆக்க வேலையில் அமருங்கள்

### வீழ்த்தும் வேலையை விடுங்கள்

— சேர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்

டெல்கிச் சர்வகலாசாலைப் பிரபுக்கள் கூட்டத்திலே உலகப் பிரசித்திபெற்ற அரசியல் வாதியாகிய சேர் அல்லாடி கிருஷ்ணசாமிஐயர் அவர்கள் "கொள்கைத் தொடர்பு ஒன்றுமில்லாத கட்சிகள் ஒன்று சேர்ந்து வெறுப்புபகை முதலியன காரணமாக, இப்போதிருக்கின்ற ஒரு அரசாங்கத்தை வீழ்த்த முயலுதலைக் கண்டித்துப் பேசுகையில், பல காரணங்களால் குடியரசு மிகக் கஷ்டமான அரசியல் முறை" என்று கூறினர்.

தொடர்ந்து பேசுகையில், "இங்கிலாந்து முதலியகுடியரசு முறை ஆட்சி நாடுகளின் அனுபவத்தின்படி குடியரசாட்சி நிலையங்களும், சுதந்திர அரசாங்கங்களும் நன்கு நடைபெறுவதற்குக் கொள்கைகளின் வேறுபாடே அத்திவாரமாகத் தூய நோக்கமுள்ள கட்சிகளும், தேவை ஏற்படும்பொழுது அரசாட்சியை ஏற்கக் கூடிய சிறந்த நோக்குடைய எதிர்க்கட்சியும் இன்றியமையாதனவாய்க் காணக் கிடக்கின்றன. கொள்கைத் தொடர்பின்றிப் பகை வெறுப்பு முதலியனவே காரணமான கட்சிகள் சிறந்த சுய ஆட்சி முறையை ஒருபோதும் ஆக்கமாட்டா.

இந்த இருபதாம் நூற்றாண்டு பொது மக்களுடையதாக விதந்து கூறப்படுகின்றது. பொதுமக்களைச் சரிபிழை பிரித்தறியச் செய்தலே இருபெருங் கடனாயிருக்கின்றது. சர்வகலாசாலைகளிற் கற்றுத் தேறிவருவோர்மீதும் மற்றும் கற்ற பேரறிஞர்மீதும் இது பொறுத்திருக்கின்றது. வாழ்க்கையின் எத்துறையிலும் சமுகத்துக்குச் செய்யவேண்டிய கடமையைக்கற்றறிந்தோர்தம் உள்ளத்தில் உறுதியாக வைத்திருத்தல் வேண்டும். அறிவைப் பரப்பும் இவ்வழிகளின சரியான ஆட்சியே குடியரசாட்சியைப்பற்றிய நினைவு செயல் ஆகியவற்றைச் சரியாக அமைக்கும்" என்று விளக்கினர்.

## தமிழாசிரியர் தராதரத்தை உயர்த்த வேண்டும்

மேல்மாகாணத் தமிழாசிரியர் சங்க வருடாந்த விழாவில் திரு. கு. வி. செல்வத்துரை அவர்கள் தலைமைவகித்துப் பேசுகையில் "ஆசிரியர்களாகிய நாம் உரிமைகளுக்காகப் போராடும்போது நமது தராதரத்தையும் உயர்த்திக் கொள்ள வேண்டும். அத்துடன் நம்மிடையே கட்டுப்பாடும் ஒற்றுமையும் ஓங்கி வளரும்படியும் கவனித்துக் கொள்ளுமாறு உங்களனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று தமிழாசிரியர்களை வேண்டி "இன்று சுதந்திர நாட்டிலே வாழும் நாம் நமது சமுகத்தின் பண்டைப் பெருமையை மீண்டும் நிலைநாட்ட முயற்சிக்க வேண்டும். சுயபாஷா ஆசிரியர்களிடம் அரசாங்கம் மாற்றாந்தாய் அன்புகாட்டுவது கண்டிக்கத்தக்கதாகும்" என்றும் "அரும் பாடுபட்டு சிதவை, அனுதை உபகாரப்பணம் ஆகியவற்றைப்பெற்றோம், மேலும் உரிமைகளுக்காக வாதாடும்போது எங்களை நாங்களே திருத்திக்கொளவேண்டும்" என்றும் குறிப்பிட்டுப் பேசினர்.

## திரு. பண்டாரநாயக்கவின் எதிர்க்கண்டனம்

திரு. தகநாயக்க விடுத்த கண்டனத் துண்டுப் பத்திரத்தைக் குறித்து, திரு. தகநாயக்க விளைவு நோக்காது கண்டனஞ் செய்யும் குறைபாடு உடைய ஒருவரென்றும், அவர் எதுவாயினும் ஓர் கட்சியைச் சார்ந்தவரென்று சொல்லமுடியாதென்றும் திரு. பண்டாரநாயக்க காலியில் நடந்த ஓர் கூட்டத்தில் திரு. தகநாயக்கவுக்கு எதிர்க்கண்டனம் விடுத்தார்.

## 'திரு பண்டாரநாயக்கவைப்பற்றி எச்சரிக்கையா யிருங்கள்'

— திரு. W. தகநாயக்க

திரு. பண்டாரநாயக்கவைப்பற்றியும் அவர் கட்சியைப்பற்றியும் என் கருத்தை வெளிப்படுத்த வேண்டியதாயிற்று. இன்றேற் பலர் பிழைவழிச் செல்வர்.

இருபது ஆண்டுகளுக்குப் பிற்போக்கு வாதியா யிருந்த திரு. பண்டாரநாயக்க, தம் கொள்கையை உடனே மாற்ற முடியுமா? தமக்கும் பிரதமருக்குமிடையேயுள்ள மன வேறுபாடே இவருடைய கொள்கை மாற்றத்திற்குக் காரண மென்பது பலரறிந்த உண்மை. குறித்த மனவேறுபாடு நீங்குமாயின் இவர் ஐக்கிய தேசியக் கட்சியை நோக்கி உடனே தவழ்ந்து செல்லுதல் நிச்சயம். இவர்கள் வேறுபாடு தலைவலை தலைவி ஊடலை ஒத்துப் பின் காதல் செறிந்த அரசியற் புணர்ச்சியின் மகிழ்தலராய் மறுமலர்ச்சி கொள்ளும்.

எனவே தருணவாதியாகிய பண்டாரநாயக்காவைப் பற்றிக் கவனமா யிருக்கும்படி முற்போக்காளர்களுக்கு எச்சரிக்கை பண்ணுகிறேன், திரு. பண்டாரநாயக்க எதேச்சைக் கொள்கையினராய்ச் சாதிமதக் குழப்பங்களை உண்டாக்குவார் ஆகையால் அவரைப் பற்றியும் அவர் கட்சியைப்பற்றியும் எச்சரிக்கையா யிருங்கள் என்று திரு. தகநாயக்க கூறினார்.

## கற்றுஞ் சிறுநக்கு - - - - நலமுறைத் திட்டம்

### இந்தியத் தலைவர் நேருவின் இன்மொழி

"நீங்கள் நெருக்கித் தொகுத்த அறிவுரைகள் பொதிந்த கலாநிலையங்களாக அமைதல் கூடாது, உங்கள் கடமைகளை இனிது ஆற்றுதற் கேற்றவாறு உங்கள் அறிவு நிலையை உயர்த்துதல் வேண்டும்.

மாணவர் உலகம் பிழையாய் அமைந்த ஓர் நூதன வழியிலே இன்று செல்கின்றது. அவர்கள் சுதந்திர இயக்கத்தின் உட்பொருளைப் பிழையாய் விளங்கி அதை ஒழுக்கமின்மையாக மாற்றிவிட்டனர். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே உள்ள தொடர்பு முதலாளி தொழிலாளியர் தொடர்பை ஒக்கின்றது. சுதந்திரஇயக்கத்தின் அத்திவாரக் கொள்கைகளுக்கு மாருன வேலைநிறுத்தம் முதலிய தீய ஒழுங்குகளில் அவர்களுக்கு நம்பிக்கையுண்டாகின்றது. எங்கள் சுதந்திரப்போர் நடந்த பிரித்தானிய ஆட்சிக் காலத்திலே அவற்றை ஆண்டிருக்கலாம். ஆனால் இன்று எல்லாம் மாறிவிட்டனவே.

சர்வகலாசாலைகளிலேஇன்று கற்கின்றவர்கள் வருங் காலத்திலே உயரிய கடமைகளை

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அரனாமமே
சூழ்க வையகமுந்துயர்தீர்கவே

# இந்துசாதனம்

யாழ் கரஹூ கார்த்திகையூ உகவ வெள்ளிக்கிழமை

## உணவுப் பஞ்சத்திற்கு உத்தரவாதிகள் யார்?

வான்பொய்த்தோ ஆறுகள் பாயா தொழிந்தோ மக்கள் உண்ண உணவு போதியதின்றி உடல்மெலிந்து உறுபிணியால் நலிந்து வாடுகின்றார்கள் என்ற அபயக்குரல் அகில உலகெங்கணும் கேட்கின்றதே. இந்தப் பரிதாப நிலைக்கு ஆர் பதில்பகரும் கடமைப் பாடுடையர் என்றதோர் வினு எழுகின்றது. ஊரவர்களா, அன்றி அவர்களின் பரிபாலனப் பொறுப்பைத் தாமாகவே தங்கள் சிரமேற் கொண்ட பொதுசனப்பிரதிநிதிகளும் மந்திரிமார்களுமா வென்றால் இருசாராருமென்றே நாம் கூற வேண்டியதாகும்.

மலைகளும் மாநதிகளும் மலிந்து பொலியும் இயற்கை யமைப்பு வாய்ந்த இவ் இலங்கையில் உணவுப் பொருள் உற்பத்திக்கான நிலச் செய்கை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. காரணம், முன்னுளில் உழுது உண்டு வாழ்வதிலே உணர்ச்சி கொண்டிருந்தனர் ஊரவர்கள். இன்னுளில்எழுதுகோலால் உழுதுவிடவேண்டுமென்று துணிந்தமையால் உணவு உற்பத்தி செய்பவர்கள் தொகை குறைந்து கொண்டே வருகின்றது. குடிசனத் தொகை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வர உணவுப்பொருள் உற்பத்தி குறைந்து விட்டால் நிலைமை எவ்வாறிருக்கும்.

காடுவெட்டிக் கழனியாக்கும் கமக்காரர்களுக்கு அரசாங்கம் போதுமான உதவி புரிகின்றதா? குளக்கோட்டன் முதலாய கிருஷிக விருப்புள்ள வேந்தர்கள் தோண்டிய குளங்களும் நீர்நிலைகளும் செவ்வனே திருத்தப்பெற்றால் இலங்கையிற் பெய்யும் மழைநீர் விழலுக்குப் போகாது விளை நிலத்திற்குப் பாயச்செய்து விடலாமே. அரசாங்கம் இலங்கையிலுள்ள குளங்களனைவற்றையும் பழைய நிலைமைக்குக் கொணர்ந்து மாரிநீரைச் சேமித்து வயல் நிலங்களுக் குபயோகிக்கக் கூடிய வசதிகளைச் செய்யப் போதிய பணமில்லை என்று சொல்ல முடியாது. சுதந்திரமடைந்த ஆசிய நாடுகளுள் பணநிலை தளம்பாதநாடு எங்கள் ஈழநாடு. பயனற்ற பணம் விழுங்கும் வேலைகளுக்கு விரயஞ் செய்வதை விடுத்து கமத்தொழில் விருத்திக்கான வற்றிற்குப் போதிய பணம் செலவு செய்தல் அரசாங்கத்தின் கடன்.

ஒவ்வொரு கிராமச் சங்கமும் அவ் வெல்லைக்குள் விளைவுக்கேற்ற நிலங்கள் முழுவதும் பயிர்ச் செய்கைக்குப் பாவிக்கப்பட வேண்டிய ஒழுங்குகளை எடுத்தல் வேண்டும், வீண் நிலமாயிருப்பின் அந்நிலத்தை உடையவர்களிடமிருந்து கிராமச்சங்கம் குத்தகைக்கெடுத்துப் பயிர் செய்யக்கூடியவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் உள்ளவர்கள் தங்கள் ஊரில் உணவுப் பொருள் உண்டு பண்ணக்கூடிய வசதிகளை ஏற்படுத்துவதற்காகிய புள்ளி விபரங்களைக் கிராமச் சங்கத்தார் தயாரித்து ஆவன செய்தல் வேண்டும். இவ்வாறு உணவுப் பஞ்சத்தை இல்லா தொழிப்பதற்கு ஊரவர்கள் தங்கள் கடமைகளையும் அரசாங்கத்தார் ஊரவர்களுக் குரிய உரிமைகளையும் பரஸ்பரம் உணர்ந்து கொள்வார்களாக.

卐

## நகரசபைத் தெரிவு

மழைவிட்டதுதான்! ஆனல் தூவானம் மாறவில்லை யென்றுங்கு, யாழ்ப்பாண நகரசபை அங்கத்தவர் தேரிவு முற்வற்றும் அதனுேடு நெருங்கிய தொடர்புள்ள தலைவர் தெரிவு வாவிருக்கின்றமையால் மழைச்கோலம் மாறாதிருக்கின்றது. வெற்றியுந்தோல்வியும் அன்றோடு மறந்துவிடப்பட வேண்டியன, உண்மையில் நகரமக்களுக்குத் தொண்டுபுரிய முன்வந்தவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களானல் தங்கள் தொண்டின் முதலாவதும் முக்கியமானதுமாகிய பணி, நகரபரிபாலனத்தை நன்கு கவனித்துப் பட்சபாதமின்றி நேர்மை வழி விலகாது நகரவாசிகளுக்குத் திருப்தியையும் நம்பிக்கையையும் கொடுக்கக்கூடிய ஆற்றலும் அநுபவமும் இன்னமும இவ்விரு குணங்களுக்கும் மேலாக, 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபாற் கோடாது "நடுநிற்கும் நற்குணம்வாய்ந்த நல்லார் ஒருவரை நடி அவரையே நடுநாயகமாகத் தெரிதலே. அன்றிஅங்கத்தவர்கள் தலைமைப் பதவியை நாடுவதும், அதற்காகப் பலவேறு வழிவகைகளைக் கையாளுவதும் நகர சபைபோன்ற பரிபாலன சபைகளுக்கும் அச்சபையிலமர்ந்திருக்கும் அங்கத்தவர்களுக்கும் அழகாகாதென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை!

இவ்வாறு பல்வகையாலும் பண்புடையார் ஒருவரை மற்றையோர் நாடுவது முடியாதேனில் திருவுளச்சீட்டிட்டு ஒருவரைத் தெரிந்துவிடுவது நன்று மனக் கோதிப்பும் பகையுணர்ச்சியும் பிரயத்தனங்களுமில்லாது அன்பை வளர்ச்செய்வதற்கும் நகரபரிபாலனத்தை நன் முறையிலும் இடுக்கண் இலாதும் நடத்துவதற்கும் இதுவேசிறந்த வழியாம்.

குடியரசு முறையிலும் சனநாயக நெறியிலும் தலைவர்களைச் சனங்கள்தேர்வதேயல்லாமல்ஒருவர் தலைவர்பதவியைத்தேடுவதும் அன்றுர் சனங்களை நாடுவதும் ஒழுங்கன்று. ஆகவே நகரசபை அங்கத்தவர்கள் அனைவரும் வரவிருக்கும் தலைவர்தெரிவில் எப்படி நடந்துகொள்கிறார்களோ அப்படியே அவர்களின் தனித்தனிச் சேவையும் இருக்கும் என்பது பெறப்படும். இம்முறையாவது ஏகமனதாக அங்கத்தவர்கள் தக்காரைத் தாமாகவே தேடித் தலைவராக்கி நாட்டுக்கு நல்லன செய்வார்களாக.

பாராளுமன்றப் பந்தரில்

# அரசியல் அவை ஒழுங்குகள்

## கட்சித் தலைவர்களின் கண்டனப் பேச்சுக்கள்

நகரசபைத் தலைவர்கள் (Mayor) பதவிக்காலம் நீடித்ததற்கு ஓர் பிரேரணையை இக்மீ 4-ந் திகதி சேர் ஜோன் கொத்தலாவல பிரதிநிதிகள் சபையிலே பிரேரித்தார்.

தக்க அறிவித்தல் சபைக்குக் கொடுபடவில்லை யென்று திரு. பீற்றர் கெனமன், டக்ரர் N.M.பெரேரு ஆகியோர் ஆட்சேபித்தனர். இவர்கள் சார்பாகத் திரு. பண்டாரநாயகவும் பேசினர். பாதகமாக 18 வாக்குகளும் சாதகமாக 45 வாக்குகளும் அளிக்கப்பட்டுப் பிரேரணை நிறைவேறியது.

அரசியற்றிருத்தப் பிரேரணையொன்றை அம்பலாங்கொடை-பலப்பிட்டிப்பிரதிநிதி கொண்டுவர அதைத் தலைவர் நிராகரித்தது முறையன்றென ஆட்சேபித்து டக்ரர் N. M பெரேரு ஓர் பிரேரணையைக் கொண்டு வந்தார்.

இத் தொடர்பில் முறைநெறி வினுவொன்றைத் திரு. G. G. பொன்னம்பலம் எழுப்ப அதை எதிர்த்துத் திரு பண்டாரநாயக, டக்ரர் N. M. பெரேரு, டக்ரர் கொல்வின் R D. சில்வா ஆகியோர் பேசினர். பலர் விரிவாகப் பேசிமுடித்தது என்று வவுனியாப் பிரதிநிதி திரு. சுந்தரலிங்கம் பேசஇடங்கொடுக்க மறுத்தார் தலைவர். டக்ரர் பெரேருவின் பிரேரணையைப் பற்றிய தீர்ப்புப் பின்பு கொடுப்பதாகத் தலைவர் அறிவித்தார்.

கலைக்கழகம் நிறுவும் பொருட்டுக் கல்விமந்திரி கொண்டு வந்த பிரேரணை இதன் பின் நிறைவேறியது.

ஒருமை கசு நோயாளர் நிலை மிக சீர்கெட்டிருக்கிற தென்று திரு. நெஜிஹுல்ட்பெரேரு திரு. பீற்றர் கெனமன் ஆகியோர் எடுத்துக் காட்டினர். இன்னும் பல நிலையங்கள் இவ்வாறு சீர்கெட்டிருக்கின்றன வென்றும் வேண்டியவாறு திருத்தத் தாம் முயல்வதாகவும் பிரதமர் பதிலளித்தார்.

# இன்பத்தின் நிலை
## இதுதானு?

தொடர்கதை அடுத்தஇதழில் ஆரம்பமாகும்

# வாழ்க்கை வானில்..........

வளர்மதி

### கல்யாணம் பதிவுசெய்யும் காரிகையார்

வனிதையர்காள்! வந்திருக்கிறது மதிப்பும் மரியாதையும். வாக்குரிமை பெற்றது பெரிதல்ல. வழக்கறிஞர்களாகும் வாய்ப்பு வந்தது பெரிதல்ல. கலியாணம் பதிவுசெய்யும் காரியம் இருக்கின்றதே மங்கள மான இவ்வைபவத்திற்கு மணம் பேசவோ, மணமுடித்து வைக்கவோ தாரைவார்த்துக் கொடுக்கவோ எதற்கும் ஆண்-மகனே தேவையாயிருந்தது இதுவரையும். இனிமேல் விவாகம் பதிவுசெய்ய வருபவருக்கு விசையிராது, விறுவிறுப்பான பேச்சிராது மென்றால், மின்னெழில், புன்னகை பொற்கொடி இவைவெல்லாம் இருக்கும். இதுவலா விவாகப்பதிவுகாரர் முன் மணப்பெண்வர மனங்கூசி வாடிவியர்ப்பள். இனிமேல விவாகப்பதிவுகாரரைக் கண்டு நாணுவது மணமகனே. இதுமாத்திரமா - தேங்காய் உடைக்கவும் இனித்தேன்மொழியாரையே தேடுவார்களே!

* * *

### தலைவர்களின் தலைகளுக்கு ஆபத்து!

திருக்கியிற் பொதுவுடைமைக் கட்சித் தலைமைவகிப்பவர் தலையிலாது தான்வகிக்கவேண்டி வருகிறது. இம்மாதம் மூன்றாந் திகதி நடைபெற்ற துருக்கிய பாராளுமன்றத்தில் பொதுவுடைமைக் கட்சித் தலைமைவகிப்பவர்கள் தூக்குத் தண்டனைக் காளாவார்களென்று சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அங்கத்தவர்களின் தலை தப்பினது தம்பிரான் புண்ணியம்; ஆனல் அவர்களுக்கும் வேறு தண்டனைகள் விதிக்கப்படும். தலையில்லாக் கட்சிகளிருப்பது துருக்கியிலும் பார்க்க எங்கள் நாட்டிற்குப் பொருத்தமாக இருக்கும். தலைமைக்குப் போட்டியின்றேல் கட்சி நிலைமை சீர்திருந்துமென்பதற்கையமின்று.

எல்லாக் கட்சியிலும் பொதுவுடைமைக் கட்சிக்கு இப் பொல்லாத் தண்டனை எதற்காக? பொதுவுடைமைக்கட்சித் தலைவர்கள் தலைவிக்கமா? அல்லது அவர்கள் தலையால் நின்று தம நிலையை நாட்டி விடுகிறார்களா? விஷயம் விளங்கினவர்களுக்குத்தான் தெரியும்.

## நல்லூர் முருகானந்த தேவார பாடசாலை

சைவத் தொண்டர்கள் நல்லூர்க் கந்தசுவாமிகோவில் வடக்கு வீதியில் தேவார பாடசாலை ஒன்று இந்த ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமி நாளில ஆரம்பித்து, ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் 10 மணி வரையும், செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி முதல் 6 மணி வரையும், வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரையும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தேவாரந் திருப்புகழ் முதலியன முறைப்படி பாராயணஞ் செய்யப் பழகுதற்குச் சைவமக்கள் முந்துவார்களாக.

## 1952-ல் பாடப்புத்தகங்கள் மாற்றப்படா

பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குப் பாடப் புத்தகங்களும் ஏனைய உபகரணங்களும் அரசினர் அச்சகத்தில் ஆக்கப்பட்டு மாணவர்களுக்குத் தலைமை ஆசிரியர்கள் மூலம் இனுமாக வழங்கப்படல் வேண்டுமென்று திரு. W. தகநாயக பிரேரித்த தீர்மானத்திற் பேசும் பொழுது கல்வி மந்திரி திரு. E. A. நுகவெல 1952-ல் பாடப் புத்தகங்கள் மாற்றப்படா வென்றும், அதற்குரிய சட்டமொன்று விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படு மென்றுஞ் சொன்னர்.

## தங்கம் கடத்துவோரைப் பிடிக்க நவீன முறை

கள்ளத்தனமாகத் தங்கம் கடத்துவோரைப் பிடிக்க விஞ்ஞான சாதனங்கள் இந்தியாவிலே உபயோகிக்கப்படுமென்று இந்திய அரசாங்க நிதி மந்திரி திரு. மகாவீர்தியாகி கூறுகிறர்.

மறைவாகக் கொண்டு போகின்ற தங்கத்தைக்கண்டுபிடிக்க ஓர் நவீன இயந்திரம் விரைவில் வெளிவருமாம்.

### அறிஞர் அருமொழிகள்

தேர்தல் காலத்தில் அரசியற் கட்சிகள் மாரிகாலத்தவளைகள் போல உற்பத்தியாகின்றன. —ஸ்ரீநேரு

## ரோமான்மத ஆசிரியர்களின் பரிதாப நிலை

### பொதுவுடைமைக் கட்சியினர் மறியற்சாலையிலடுகின்றனர்

பதினேழு ரோமான் கத்தோலிக்கமத ஆசிரியர்கள் சீனமறியற் சாலைகளி லிடப்பட்டிருக்கின்றனென்றும் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனரென்றும் அறியவருகின்றது.

## யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயமண்டபத்தில் 15-12-51 சனிக்கிழமை காலை நடைபெறவிருக்கும் சங்கத்தின் 28-வது ஆண்டு விழாவிலே இலங்கைக் கல்விப்பகுதித் தலைவர் Dr. H. W. ஹவுஸ் அவர்கள் முன்பாக நிறைவேற்றவெடுத்துக்கொண்ட தீர்மானங்கள்.

1. அண்ணாமலை, சென்னை முதலிய அங்கீகாரம் பெற்ற இந்திய பல்கலைக் கழகங்களிலே, தமிழில் வித்துவான் புலவர், சமஸ்கிருதத்தில் சிரோமணி, மகோபாத்தியாய முதலிய பட்டங்கள் பெறுவோரும் மதுரைத்தமிழ்ச்சங்கத்திலும் யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்திலும் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பண்டித பட்டம் பெறுவோரும் சங்கீதத்திலும் தேகாப்பியாசத்திலும் பயின்ற ஆசிரியர்களைப்போன்று, தராதரப்பத்திரமுள்ள ஆசிரியர்களாகக் கணிக்கப்படவேண்டுமென்று இச்சங்கம் உறைப்பாக வற்புறுத்துகின்றது.

2. ஆங்கிலத்தில் பயிற்றப்பட்டபட்டதாரிகளுக்குப் புறம்பான உயர்ந்த சம்பளத்திட்டமிருப்பதுபோலவும் பயிற்றப்பட்ட பண்டிதர், வித்துவான் புலவர்களுக்கும் சாதாரணமான பயிற்றப்பட்ட ஆசிரியர்களிலும்பார்க்க உயர்ந்த சம்பளத் திட்டம் வகுக்கப்படவேண்டுமென்று இச்சங்கம் கருதுகின்றது.

3. இலங்கைப்பல்கலைக் கழகத்தில் ஆங்கில பட்டதாரிகளுக்குப் படிப்பிக்கும் முறைகளில் ஒருவருடம பயிற்சிகொடுப்பதுபோன்று, தமிழ், சமஸ்கிருத, வித்துவான், புலவர், பண்டிதர்களுக்கும் ஒருவருடப் பயிற்சி கொடுக்கவேண்டுமென்று இச்சங்கம் வேண்டுகின்றது.

4. தமிழ் ஆராய்ச்சியையும் பல துறைகளில் நூல்கள் எழுதுவதையும் ஊக்கப்படுத்தும் நோக்கமாகச் சங்கத்தாரிறவும் ஆராய்ச்சித் தேர்வுக் குழுவினரால் தகுதியானோரெனக் காணப்படும், நூல்கள் எழுதும் புலவர், வித்துவான், பண்டிதர் முதலியோருக்குப் பண்டிதமணி யென்ற பட்டம் அளிக்கவேண்டுமென்று இச்சங்கம் வேண்டுகின்றது.

அ. சரவணமுத்து
காரியதரிசி

மல்லாகம்,
[illegible]-12-51.

## திருக்குறள் முதற்பத்ததிகாரம்

பதவுரை, கருத்துரை விசேடவுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், விலை சதம் 75.

மனேஜர்
சைவப்பிரகாச யந்திரசாலை
யாழ்ப்பாணம்

## தேவை

கார் ஓட்டுவதில் பத்து வருட அனுபவமுள்ள, தொழில் முறையில் குற்றஞ் சாட்டப்படாத லொறிச் சாரதி ஒருவர் தேவை.

சம்பளநிர்ணய சபையாரின் திட்டப்படி சம்பளம் கொடுபடும். பிணை தேவை. இந்தமீ 15-ந் திகதிக்கு முன் யாழ்ப்பாணம் கொட்டடி ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஐக்கிய பண்டகசாலைச் சமாசக் காரியதரிசிக்கு விண்ணப்பம் செய்யவும்.

M. 150 7—12—51.

## சாவகச்சேரிப் பட்டினசங்கத் தலைவர்

பட்டின சங்கத் தேர்தலில் வரியிறுப்போர் சங்கத்தார் வேறு கட்சி அங்கு இல்லையென்ன, அமோக வெற்றி பெற்றனர். ஆகவே தலைவர் தெரிவும் தட்டுமுட்டின்றி நடக்குமென்று நம்பிக் களித்தனர் வாக்காளர். ஆனால், பதவிவேட்டையை எழுப்பி வரியிறுப்போர் கட்சியுள் கட்சிப்பிளவு உண்டாக்குதற்கு முயற்சி உருவெடுக்கின்றதாம். பரிதாபம்.

## கைலஞ்சக் காடேறியைக் களைக்கக் கழகம்

நம்நாட்டு மக்களை அலைத்து வருத்துகின்ற கைலஞ்சம் என்னும் காடேறியைக் கலைத்து நாட்டினின்று நீக்குதற்கு வடமத்திய மாகாணக் கிராம முன்னேற்றச்சங்கங்கள் ஓர் கழகம் அமைக்கின்றனர் என அறிகிறோம்.

இத்தகைய நன்முயற்சி நம்நாடெங்கும் பரவவேண்டும்.

## பெண்கள் விவாகப்பதிவுகாரராகலாம்

விவாகம் பிறப்பிறப்புப் பதிவுகாரர் பதவி பெண்மணிகளுக்கும் வழங்கப்படலாம் என்று உள்நாட்டு மந்திரி சேர் ஒலிவர் குணதிலக கட்டளையிட்டிருக்கின்றார்.

இப்பதவிக்குப் பெண்மணிகள் அனுப்பிய விண்ணப்பப் பத்திரங்கள் முன்னர் நிராகரிக்கப்பட்டதால் இச்செய்தி அன்னாருக்கு கனிபெருவகை விளைக்கும்.

## கதம்பக் கட்சிகளும் காளான் முளைகளும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

இதற்கிடையில் திரு. பண்டாரநாயக்கா என்செய்வார். கண்டனத்திற்குக் கண்டனம் விடுக்கத்தானே வேண்டியது. சொன்னார் "திரு. தகநாயக்காவின் பேச்சை எவரும் எடுத்துக்கொள்வதில்லை".

என்ன பரிதாபம் பந்துபோல் உருண்டோடுகின்றதே இலங்கை அரசியல் வாதிகள் நிலைமை. சென்ற வாரம் உலகம் உவக்கும் நேரு அவர்களை திரு. அம்பேத்காரும் சமூகசமக்கட்சித்தலைவர் திரு.மேத்தாவும்தேர்தல் சமரசஞ் செய்துகொண்டதைக் கண்டித்துப் பேசுகையில இதற்கெல்லாம் அடிப்படையான நோக்கம் சுயநலம் அல்லாற் பரநலம் அல்ல என்று ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.

இடதுசாரிக் கட்சியினரும் விடுதலைக்கட்சியினரும் தமிழரசுக் கட்சியினர்மீது பேரன்பு காட்டிப் பிரேமை கொள்கின்றனர். மிகவும் நல்லது. ஒன்று மட்டும் தமிழ் மக்கள் அறிந்தாற் போதும்.

### இசைவார்களா?

"இலங்கையில் எப்பாகத்திலும் சரிவர ஏற்றத்தாழ்வின்றித் தமிழுஞ் சிங்களமும் அரசாங்க மொழிகளாகப் பாவிக்கப்படுதல் வேண்டும் என்பதை நாம் இருதயபூர்வமாக ஆதரிக்கிறோம், அன்றியும் இவ்வொழுங்கை அரசாங்கம் ஏற்காவிட்டால் அக்கணமே நாம் அனைவரும் பாராளுமன்றப் பதவியினின்றும் விலகிவிடுவோம்" என்ற இந்த நிர்ணயத்தை இடதுசாரிகளும் திரு.பண்டாரநாயக்காவின் விடுதலைக் கட்சியினரும் ஏற்றுக் கொள்வார்களா?

தமிழர்மகாசபையினருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் ஏற்பட்டசமரசம் முறிந்து போகக் காலம் வந்து விட்டது என்பதை ஐக்கியதேசியக்கட்சியினர் அறிந்துகொள்ள வேண்டியது. என்னே! தமிழ்மொழி தத்துவமற்ற மொழியானுற் சமரசமென்ன சமாதானமென்ன!

## கற்குஞ் சிறாருக்கு நன்முறைத்திட்டம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஏற்கவேண்டியவராவர். அவர்கள் ஒவ்வொருவரும் முன்னணி விவேக நிர்களாதல் சாலாது. ஆனால் பெரும்பான்மையோர் கூர்த்த மதியினராதல் வேண்டும். இன்றேல் எம்நாடு கீழ்நிலையெய்திவிடும்.

இந்தியா முதன்மைவாய்ந்த நாடாகவேண்டுமானுல் எங்கள் ஆடவர் பெண்களின் அறிவொழுக்க நிலை உயர்ச்சிபெறல் வேண்டும். இது அரிது. அரிதேயெனினும் எய்தவேண்டும். கூர்த்த மதியும் சிறந்த ஒழுக்க முறையும் பிருத்தானியருடைய இருபெருங் குணங்களாயமைகின்றன. இவற்றால் அவர்கள் எந்த நெருக்கடியான நிலைமையையும் தங்கள் ஒழுக்க முறையாற் சமாளிக்கக்கூடியவர்களாகின்றனர். அவர்கள் வீண் கூக்குரலிட்டிலர். வேண்டியவாறு உழைத்தனர். வீண் கூக்குரலிடுதலால் அரசியற் தலைவர்களாதல் கூடுமென்று இந்திய மக்கள் நம்புகின்றார்கள். அரசியல் வாதிகள் மக்கட்டொகுதியினருடன் ஊடாடவேண்டியவராகின்றனரென்றும் அது கூக்குரலால் ஆகாதென்றும் அவர்கள் அறியார்போலும்" என்று பண்டிதநேரு அவர்கள் குவாலியூரில் நடந்த மாணவர்கள் கூட்டமொன்றிற் புத்திமதி கூறினார்.

## யாழ்நகருக்கு குழாய் நீர்வசதி கொடுபடுமாம்

### ஆனால் ஒருமுகப்பாடு இன்றியமையாதது

யாழ்ப்பாணத்துக்கு நீர்க்குழாய்வசதி தாமதமின்றித் தருதற்கு அரசாங்கத்தால் ஆவன எல்லாம் செய்யப்படுமென்று பிரதம மந்திரி திரு. சேனநாயக்க அவர்கள் யாழ்ப்பாண நகரசபைக் காரியாதிகாரிதிரு. கா. சண்முகம்அவர்களுக்கு உறுதிமொழி கூறியிருக்கின்றனர்.

ஆனால் யாழ்ப்பாண நகரசபையாரும், நகரவாசிகளும் இந்த நீர்க்குழாய் அமைப்பை ஒருமுகப்பட்டு ஏற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்று தொடர்ந்துகூறினர். இனியாயினும் நாம் ஒருமுகப்படுவோமா?

## உபதபாற் கந்தோர்களுக்கு மின்சாரப் பேச்சுக் கருவி

ஏறக்குறைய 100 உபதபாற் கந்தோர்களுக்குத் தந்திப் போக்குவரவுக்குத் தகுந்த மின்சாரப்பேச்சுக்கருவி(Telephone) வசதி கொடுக்கப்படுகின்றது.

இதற்கு வேண்டிய கம்பங்கள் முதலியன அமெரிக்கா இங்கிலாந்து முதலிய இடங்களிலிருந்து வரவழைக்கப்படுகின்றனவாம்.

# உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது.

எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 9—12—51——15—12—51

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

சென்ற இரண்டு வாரத்தைய கவலை நீங்குதலுமுண்டு. நன்முயற்சியால் நற்பலனுண்டு. செலவு அதிகரிக்கக்கூடும். சுற்றத்தவரால் கவலையுண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

பணநிலை நன்று. குடும்பவிஷயம் சிக்கலாகவேயிருக்கும். தொழிற்றுறையில் நன்மாற்றங்கள் வாரமுடிவில உண்டாகலாம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

மனநிம்மதியுண்டு. எதிரிகள் தலைகாட்டமாட்டார்கள். வியாழன் வெள்ளி தவிர இவ்வாரம் இன்பந்தரும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

அன்னியர் புறநாட்டவர் உதவி ஏராளமாகக் கிடைக்கும். எனினும் சுற்றத்தார் தொந்தரவுக்கிடமுண்டு. தொழில் முறையில் சிறு சலனங்கள் ஏற்படலாம். வார முடிவில் வெற்றிக்கிடமுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.

புதிய நண்பரைப்பற்றி இவ்வாரம் அவதானமாக இருத்தல்நன்று முக்கிய மாற்றம் செய்யாதொழிக. புதன்கிழமைக்குப் பின் சொந்த விஷயங்களில் சில திருத்தங்கள் எதிர்பார்க்கலாம். ஒரு பிரதானமானவிஷயத்தில் சில நண்பர்களது உதவி கிடைக்கக்கூடும்.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம அத்தம சித்திரை 1, 2ம பாதம்.

ஞாயிறு திங்களும் செவ்வாய் காலையும் அவதானமதேவை. நண்பர் ஏமாற்றக்கூடும். தொழிற்றுறையிலும் தொந்தரவுகள் ஏற்படலாம். புதன்கிழமைக்குப்பின் திருத்தமுண்டு. புதிய அலுவல்கள் ஆரம்பிக்க வியாழன் வெள்ளி நன்று.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம

பிரதானமான மாற்றங்கள் செய்யின் ஞாயிறு திங்கள் நன்று. செவ்வாய் புதன் வியாழனில் எச்சரிக்கையாயிராவிட்டால் பாரதூரமான கஷ்டங்கள் ஏற்படும். வியாழனுக்குப் பின் திருத்தமுண்டு. ஆனால் அதிலாபமில்லை.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம அனுஷம், கேட்டை.

இந்தவாரம் தேகசுகவீனத்தாற் சலனமுண்டு. முற்பகுதி புதுமுயற்சிக்கு உத்தமம். ஆனால் வியாழன் பிற்பகல் வெள்ளி சனி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம.

இவ் வாரம் தொழில்முறையில் திருத்தத்துக்கிடமுண்டு, சிக்கல்கள் நீங்கும். புதுமுயற்சிகளை முன்னேற்றுக.

**மகரராசி** உத்தராடம் 2,3,4 பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இவ்வாரம மனச்சமாதானம் அல்லது ஆறுதல் இல்லை. செலவு அதிகரிக்கும். வாரமுடிவில் நல்வரவுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

விரும்பிய மாறுதல்களுக்கு நல்லவாரம். பின்புதன்மை விளக்கும் புதுத்தொடர்புண்டாகும், பகைவரை வெல்லலாம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இவ்வாரம் முன்னர் நிலைத்த குடும்பச் சிக்கல்கள் நீக்கலாம். புதுமுயற்சி விரும்பிய நன்மை தரும் பெண்பாலார் உதவிக்கு இடமுண்டு.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப் பெரிய
—நகை—
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

# நம்பனுர் நாகேச்சரனுர் ஆலயம்

## தேவாரம்பெற்ற திருச்சிறப்பு

உலகில் வாழும் மக்கள் யாவரும் விரும்புவது இன்பமே. அவ் இன்பம் உடலைப் பற்றியதும் உயிரைப்பற்றியதும் என இரு வகைப்படும். ஒன்று இம்மை இன்பம்; மற்றது மறுமை இன்பம். அவற்றைப் பெறுதற்கு வகுத்த வழிகளே சமயங்களாம். உடல் காட்சிப் பிரமாணத்தால் அறியப்படுவதுபோல உயிர் காட்சிப் பிரமாணத்தால் அறியப்பட மாட்டாது. அநுமானப் பிரமாணத்தினுலே அறிதல் வேண்டும். எங்ஙனம் எனின், இவ் வுடம்போ சடம் - அறிவில்லாதது; இதன்கண் நின்பத் துன்பங்களை அறிந்து நுகர்தற்கு இதனின் வேருய் ஆன்மா என்றொரு பொருள் உண்டென்பது. இனி, ஓர் உடம்பின் நிகழும் இன்ப துன்பம் மற்றோர் உடம்பின் அறியப்படாமையின் உடம்புதோறும் வேறு வேருக உள்ள ஆன்மாக்களும்; அவ் ஆன்மாக்கள் அநுபவிக்கும் இன்பத் துன்பத்திற்குக் காரணமாகிய புண்ணிய பாவம் என்னும் கர்மாக்களும், அவற்றுல் உளவாகும் சுக துக்கங்கள் என்னும் பலன்களும், அப்பலனைக் கொடுக்கும் பதியும் எனப் பொருள் நான்கென்று முன்பின் விரோதமின்றி உளங் கையின் நெல்லிக்கனி என விளங்க உணர்த்துவது சைவசமயநூல்களாம். இது 'செய்வினையும் செய்வானும் அதன் பயனும் சேர்ப்பானும், மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே, இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை என, உய்வகையாற் பொருள் சிவனென்றருளாலே உணர்த்தறிந்தார்'' (பெரிய. நாக். 5.) என்பதனுல் அறியக் கிடக்கின்றது. ஆதலின் சைவ சமயமே சற்சமயம். சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பது தேற்றமாம்.

பரம கருணுநிதியாகிய சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும்பொருட்டுக் குருலிங்கம் சங்கமம் மூன்றையும் தமக்குத் திருமேனியாகக் கொண்டருளுவர். அத்துவசுத்தி செய்யப்பட்டுச் சைவ சித்தாந்த சாத்திரங்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த உயிரிலே சிவாசனம் மூர்த்தி முதலியன நியசித்து அபிடேகம் பண்ணப்பட்டவரே சற்குரு. தேகாதிப்பிரபஞ்சத்தை விடுதலுச் சிவசம்பந்தம் உற்றவரே சங்கமம். சிவஞானிகள்பாவனையுற்றதே சிவலிங்கம். இது காணுத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய், நீணும் அணிக்தார்க்கு நிகழ்குறியாம. (ஷை புரா. 8) இது பஞ்ச சதக்கியங்களுள் கர்ம சதாக்கியம் எனப்படும். தேவர்களும் இப்பூமியின்கண் வந்து சிவலிங்கத் தாபனஞ் செய்து வழிபட்டு வேண்டிய இஷ்ட சித்திகளைப் பெற்றுர்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. மறை ஞான சம்பந்தர் தாம் எழுதிய சிவஞானசித்தியார் உரையில 'பூசையில் நிகழும் ஞானுநிகம் குறையும் அதிகமும் அருவுருவாகிய சிவலிங்க பூசையில் இல்லையாகும்' எனக் கூறுவர்.

மேலே சுருக்கிக் கூறியவாறு ஆன்மாக்களுக்குப் புத்தி முத்தி அளித்தற்பொருட்டு, முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் சிவலிங்கத் திருமேனிகொண் டெழுந்தருளிய தலங்களுள் காவிரியின் தென்கரையில் 29 வது, திருநாகேச்சுரம். மூவர்பாடலும் பெற்ற பெருமையுடையது. ஒரு சிவராத்திரியில் நாகராசனுகிய ஆதிசேடன் பாதலத்திலின்றும் பிலத்தின் வழிவந்து நான்கு யாமத்தும் நான்கு தலங்களில் பூசித்தான் என்றும், அவற்றில் இது ஒன்று என்றும் கூறுவர். மற்றவை திருவலஞ்சுழி, திருப்பாம்புரம், திருநாகைக்காரோணம் என்ப. நாகராசன் பூசித்ததை மேலே பதிகக் குறிப்பிற் காண்க.

ஆலய அமைப்பு: மூன்று பிராகாரங்களை உடையது. முதற் பிராகாரத்தில் கருப்பக் கிருகத்தைச் சுற்றித் தென்புறம் 3 அடி உயரத்தில் அழகிய சிற்பவேலைத் திறம் அமைந்த நடராச மூர்த்தமும் தக்ஷிணமூர்த்தமும் மேற்கிலும் வடக்கிலும் அண்ணுமலையார், பிர்மா, துர்க்கை முதலிய திருவடிவங்களும் உள்ளன. சுவாமிக்கு வலதுபக்கத்தில் சோமாஸ்கந்தருக்குத் தனி ஆலயம் உண்டு. சத்தகன்னிகைகளும் தென்பக்கத்தில் வீற்றிருக்கிறுர்கள். சோமாஸ்கந்தர் ஆலயத்தின் பின்புறம் தலவிநாயகருக்குத் தனியே சிறு ஆலயம் உண்டு. மேற்பக்கத்தில் சந்திரசேகரர், சுப்பிரமணியர், பஞ்சலிங்கம், இலக்குமி, சரஸ்வதியும் சண்டேசுவரரும், ஈசான திக்கில நடராசப்பெருமானும் சுவாமிகோயிலுக்கருகில் இடது பக்கத்தில் பிறையணி அம்மையும் இருவர் கோயிலுக்கும் இடையில் சுப்பிரமணியரும், கீழ்ப்புறத்தில்சிவசத்தி நாராயணியும் பைரவர் சந்திரன், சூரியன் முதலானவர்களும் தென் மேற்கில் அதிகாரநந்தியும் வீற்றிருக்கிறுர்கள் அதிகார நந்திக்குப் பக்கத்தில் சேக்கிழார், அவர் அருமைத் தாயார், தம்பி பாலறுவாயர் ஆகிய மூவர் படிமங்களும் உள்ளன. அவர்களுக்குப் பக்கத்தில் சமயகுரவர்கள் காட்சியளிக்கிறுர்கள்.

முதற்பிராகாரத்தில் சக்தியின் முன்புள்ள மண்டபம் சேக்கிழார்

> பொன்னேர் தருமே னியனே புரியும்
> மின்னேர் சடையாய் விரைகா விரியின்
> நன்னீர் வயனு கேச்சர நகரின்
> மன்னே யெனவல் வினைமாய்ந் தறுமே.
>
> — சம்பந்தசுவாமிகள்.

மண்டபம் என வழங்குகிறது. உள்ளிருந்து முதல்வாயிலைக் கடந்ததும் இருபுறத்தும் 12 அடி உயரத்தில் சுதையிலாகிய துவாரபாலகர் வடிவங்களும் இடதுபுறத்தில் நவக்கிரகங்களும் உள்ளன. சக்தியின்முன்பு இரண்டாம் பிராகாரத்தில் உள்ள இந்த மண்டபத்தை ஐயன்தீக்ஷிதர் மண்டபம் என்கிறுர்கள். மண்டபத்தின்மேல் ருக்வேத மூர்த்தி, யசுர்வேத மூர்த்தி, சாமவேத மூர்த்தி, அதர்வணவேதமூர்த்தி ஓவியங்களுடன் தலவரலாறு சம்பந்தமான ஓவியங்களும்தீட்டப்பெற்றுள்ளன. இரண்டாம் பிராகாரத்தில் மேற்பக்கத்தில் ஆதிசேடன் இரு மனைவியோடும் காட்சியளிக்கின்றுர். மூன்ருவது பிராகாரம் மிகப்பெரியது, இரண்டாம் வாயில் கோபுரத்தில் தென்பக்கம் வைநாதர் தாபித்த யந்திரம் உள்ளது. முன்னெல்லாம் அதற்குச் செய்த விசேஷ பூசைகள் இப்போது தெற்குக் கோபுரத்தில் வெளிப்பக்கத்தில துவாரபாலகர்களுக்குச்செய்யப்படுகின்றன. மூன்ரும பிராகாரத்தில் நாற்புறமும் கோபுரங்கள் உள்ளன. சக்தியின் எதிரில் வடபக்கம் நூற்றுக்கால் மண்டபமும் தென்பாகம் அழகிய படித்துறையோடும் சுற்றுமண்டபத்தோடும் கூடிய சூரிய புஷ்கரணி தீர்த்தமும் உள்ளன. தீர்த்தக்கரையில் ஒரு விநாயகர் ஆலயமும் உண்டு. மூன்ரும் பிராகாரத்தில் ஈசானிய திக்கில் அம்மைக்குத் தனியேயும் ஆலயம் உண்டு. அது இரண்டு பிராகாரங்களையுடையது.

இத்தலம் சேக்கிழார் பெருமானுக்கு மிகவும் விருப்பமானது. இத்தலத்தில் வைத்த பற்றின் மிகுதியால் தமது சனன பூமியாகிய குன்றத்தூரிலும் இதுபோலும் ஆலயம் அமைத்து, திருநாகேசரம் எனவே பெயரும் இட்டு நித்திய நைமித்திகங்களுக்கு வேண்டிய நிபந்தங்களும் வகுத்தருளினுர்கள். அதனை இன்றும்காணலாம். குன்றத்தூர்த் திருநாகேச்சரம் என வழங்கி வருகிறது.

திருஞான சம்பந்தப்பெருமான் அருளிய இந்தனப் பண்பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் நாகேச்சர நகரின் மன்னே, அறவா, பசுவா என இறைவன் பெயர்களை எடுத்தோதவே வினை மாய்ந்தறும் என்கிறுர்கள். நான்காவது பாசுரத்தில் 'பகவா' எனப் பகவற்சத்ததால் சிவபெருமானைப் போற்றியிருக்கிறுர்கள். புறசமயத்தவரான நிகண்டு நூலுடையாரும் 'பசுவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்' எனப் பகவற்சத்தத்திற்குச்சிவன் பொருள் என்பதை மாயோன் முதலிய பொருள்களினுல் மற்றைக் கடவுளரைக் கூறி 'ஈச்' சத்தத்தினுல் சிவபெருமானை விளக்கியிருப்பதனுலும் அறியலாம். செவ்வழிப்பண் பதிகத்தினுல் திருநாகேச்சரம் பழங்காவிரியின் தென் கரையில்உள்ளது என்றும், நாகேச்சரம் கண்ணினுற் காணவல்லார் அவர்கண்ணுடையார்கள், என்றும்; (பாசுரம் 2) 'நாகேச்சரம் நண்ணுவார்க்கு நாளும் கோளும் தீயவேனும் நன்காம்' (பாசுரம் 6) என்றும் போற்றியிருப்பதோடு சூரியனும் சந்திரனும் வழிபட்ட தலம் என்பதனை 7 வது திருப்பாசுரத்திலும் விளக்கியிருக்கின்றுர்கள்.

திருநாவுக்கரசுநாயனுர் அருளிய திருநேரிசைப் பதிகத்தில 'நாகவீச்சரவனுர் இரவொடு பகலுந் தம்மை நச்சுவார்க்கினியர்' என்றும் (பா.1) வஞ்சகர்க்கரியர்; மருவினேர்க்கு எளியர் என்றும்; திருக்குறுந்தொகைப் பதிகத்தில் இத்தீவு நாவலந் தீவு என்றும் (பா. 2.) சந்திர, சூரியர்களுடன் நாகராசன் வழிபட்ட தலம் என்றும் (பா. 4) திருத்தாண்டகத் திருப்பதிகத்தில் 'திருநாகேச்சரத்து வானைச் சேரா தார் நன்னெறிகட் சேராதார்' என்றும் போற்றி யிருக்கின்றுர்கள். திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில 'சேராதார் தீ நெறிக்கே சேர்கின்றுர்' என்றதும் காண்க.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய பஞ்சமப்பண் பதிகத்தில் பிறையணி வாணுதலாள் எனத் தொடங்கி யிருப்பது சுவாமிக்குப் பக்கத்தில் உள்ள அம்மையாரைக் குறிப்பது போலும். பாசுரந்தோறும் 'நாகேச்சரத்தானே நீலமால் விடமுண்டதென்னே; மதகரியின் உரிபோர்த்தது என்னை! வேள் பொடியாக விழித்தல் என்னே; என வினவியதுபோலப் போற்றியிருப்பது எல்லாம் அடியார்களுக்கு அநுக்கிரக நிமித்தமே என் பதை விளக்கியவாறும்.

சுவாமி. சண்பகாரணியேசுவரர்; அம்மை: பிறையணிஅம்மை, குன்றமுலையம்மை. இருப்பிடம்: திருநாகேச்சரம். புனகவண்டி நிலையத்திலிருந்து தெற்கே ¾ மைல் தூரத்தில உள்ளது. மட்சாலை.

— த. ஆ. வெளியீடு
எண், 257.

## பேச்சுப் போட்டி

### இராமநாதன் குழுவினர் வெற்றி

நிகழும் கார்த்திகைத் திங்கள் 17-ம் நாள் (3-12-51) பலாலி அரசாங்க பயிற்சி நிலையத்தில் வருடாந்தப் பேச்சுப் போட்டி நிகழ்ந்தது. அத்தருணம் திரு. S. நடேசன் (Senator) திரு. S. R கனகநாயகம், முதலியார் S சின்னத்தம்பி ஆகியோர் நீதிபதிகளாயமைந்தனர்.

பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்று, வெற்றிப் பரிசாய்ப் பெற்றனர் வெள்ளிக்கிண்ணத்தை இராமநாதன் குழுவினர்.

திரு. V. K. ஈசுரபாதமும திரு. A. கந்தையாவும் முறையே முதலாம் இரண்டாம் நிலைகளை எய்தினர்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14 20-11-46—20-11-49. S. கனகசபை
சிறுப்பர்.



| திறமான | திறமான |
|---|---|
| தேக்க மரங்கள் | ருூவிமார்க்ஓடுகள் |
| பல தினிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.



## பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00

பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்தாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு; இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40

வில்லி பாரதம் - புட்ப யாத்திரைச் சருக்கம் பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள்விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ 1—25ச.

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு. நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன் மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகாநந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரு. 1—20 ச.

உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்) ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத் தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச.

ஈழமண்டல சதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; ஈழநாட்டின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் விலை ரு 1-00

சைவ சமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45.

'ஆறுமுகநாவலர்'' (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணு 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப்
புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarponnai, Jaffna.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday, December 7, 1951,